### கழக அரசு மேம்படுத்திய கொளத்தூர் - பெரியார் நகர் அரசு மருத்துவமனையில்

# கடந்த ஓராண்டில் மட்டும் 1000 பேருக்கு - நவீன ஆஞ்சியோ சிகிச்சை!

## தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான நவீன வசதிகள்!

**சென்னை, மே 29-**

**சென்னை கொளத்தூரில் அமைந்துள்ள பெரியார் நகர் அரசு மருத்துவமனை இதய இடையீட்டு ஆய்வகத்தில் ஓராண்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆஞ்சியோ பரிசோதனைகளும், சிகிச்சைகளும் அளிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக மருத்துவமனையின் கண்காணிப்பாளர் டாக்டர் ஹேமலதா கூறியதாவது:-

கொளத்தூர், பெரம்பூர், வில்லிவாக்கம், வியாசர்பாடி உள்ளிட்ட வடசென்னை பகுதியில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகளை வழங்கும் நோக்கில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன பெரியார் அரசு பொது மருத்துவமனை, கடந்த 2021 இல் புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்டது.

தனியார் மருத்துவமனைகளுக்கு நிகரான ஸ்கேன் பரிசோதனைகள், டயாலிசிஸ் சாதனங்களுடன் 860 படுக்கை வசதிகள் இங்கு அமைந்துள்ளன. நாள்தோறும் 3,100 நோயாளிகள் சிகிச்சைக்காக பெரியார் அரசு மருத்துவமனைக்கு வருகின்றனர்.

இந்நிலையில், அதிநவீன இதய இடையீட்டு ஆய்வகம் (கேத் லேப்) கடந்த ஆண்டு மே மாதம் இங்கு தொடங்கப்பட்டது.

ஓராண்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆஞ்சியோ பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 591 ஆண்களும், 409 பெண்களும் இதன் வாயிலாக பயனடைந்துள்ளனர்.

இதய நாள பாதிப்புகள் மற்றும் அவசர கால மருத்துவ சிகிச்சைகள் தேவைப்பட்டோருக்கு இந்த இடையீட்டு ஆய்வகம் மறுவாழ்வு அளித்துள்ளது.

முதல்வரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு கட்டணமின்றி சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன என்றார் அவர்.

# கேரள முன்னாள் முதல்வர் பினராயி விஜயன் வீட்டில் அமலாக்கத் துறை சோதனை!

## எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கும் நடவடிக்கை – கட்சிகளின் தலைவர்கள் கண்டனம்!



திருவனந்தபுரம்,மே 29-

கேரள மாநில முன்னாள் முதல்வரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான பினராயி விஜயனின் வீடு உள்ளிட்ட 12 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டுள்ளனர். எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கை இது என்று பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

'கொச்சின் மினரல்ஸ் அண்டு ரூடைல் லிமிடெட்' (சிஎம்ஆர்எல்) என்ற கனிம நிறுவனத்துக்கு கேரள அரசு சுரங்க அனுமதி வழங்கியதில் லஞ்சம் பெற்றது, பண மோசடி நடந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதில் பினராயி விஜயனின் மகள் டி.வீணாவின் 'எக்ஸாலாஜிக்' என்ற ஐடி நிறுவனத்துக்கு நேரடி தொடர்பு இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு வைத்தன.

இந்நிலையில், தற்போது அமலாக்கத் துறை சோதனை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது.

சிஎம்ஆர்எல் விவகாரத்தில் அமலாக்கத் துறை விசாரணையை ரத்து செய்ய முடியாது என கேரள உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்தது. இந்த வழக்கை சிஎம்ஆர்எல் நிறுவனம் தொடுத்திருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (மே 27) அமலாக்கத் துறை அதிகாரிகள், முன்னாள் முதல்வர் பினராயி விஜயனின் வீடு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

வீணாவின் கணவரும், முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சருமான பி.ஏ.முகமது ரியாஸ் வீட்டிலும் சோதனை நடைபெற்று வருகிறது. இந்த சோதனையானது திருவனந்தபுரம், கோழிக்கோடு உள்ளிட்ட நகரங்களில் நடைபெறுகிறது.

சி.எம்.ஆர்.எல், நிறுவனத்திடம் இருந்து எக்ஸாலாஜிக் நிறுவனம் ரூ.1.72 கோடியை முறைகேடாக பெற்றதாக வருமான வரி தீர்வு வாரியம் தெரிவித்தது. இதில் வீணா மட்டுமல்லாது அரசு அதிகாரிகள் மீதும் குற்றச்சாட்டு எழுந்துள்ளதாக கூறி இந்த சோதனை நடைபெறுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்திற்கு பல்வேறு கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள்!

## மாமன்ற உறுப்பினர்கள் புகார்!

சேலம், மே 29 -

சேலம் மாநகராட்சி பகுதிகளில் த.வெ.க. வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள் என மாமன்றஉறுப்பினர்கள் புகார் கூறுகின்றனர்.

சேலம் மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் ஆ. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தெய்வலிங்கம் மாமன்ற உறுப்பினர் த.வெ.க.வினர் வார்டுக்குள் அத்துமீறி நுழைந்து ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் போட்டு அட்டகாசம் செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை தடுக்க மாநகராட்சி சார்பாக சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

தனியாருக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு பதில் அளித்த மேயர் ஆ ராமச்சந்திரன் உறுப்பினர்களின் வேண்டு கோளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.



ஒன்றிய முன்னாள் அமைச்சர் – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி.யை, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர் பொறியாளர் பெ,பிரபு (எ) ஜெயலட்சுமணன் அண்மையில் நடைபெற்ற தமது இல்ல விழாவையொட்டி குடும்பத்துடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது அவர், தான் எழுதிய ஏழு புத்தகங்களை வழங்கி வாழ்த்தினார். லத்தூர் தெற்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளர் மார்க் ஐ.வெங்கடேசன் அப்போது உடனிருந்தார்.

